*1*

# வெளிப்படுத்தின விசேஷம் என்ற புத்தகத்தை நான் நேசிக்கின்றேன்!

*நான் இடர்ப்பாட்டில் இருந்தேன் என்பதை நான் அறிந்திருந்தேன். ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில், தொடர்ந்து வரும் புதன்கிழமை மாலையில் இருந்து நான் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின்மீது ஒரு பாடத்தைத் தொடங்குவேன் என்று அறிவிக்கப்பட்டது. ஆராதனைக்குப் பின்பு, எனக்குப் பிரியமான மாணவி ஒருத்தி என்னை அணுகினாள். அவள் தனது மூக்கைச் சுளித்துக் கொண்டு, "அதைப் பற்றி எனக்கு அக்கறை யில்லை!" என்று கூறினாள்.*

*எனது அந்தத் தோழி (தனது கருத்தில்) தனிப்பட்டு இருக்கவில்லை. பல மக்கள், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தைப் பற்றி "அக்கறை கொள்வதில்லை." நான் ஒரு பையனாக இருந்தபோது, வயதுவந்தவர் களுக்கான வேதபாட வகுப்பைப் போதித்தவர்கள், அடிக்கடி - வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திற்கு அவர்கள் வந்து சேரும் வரையில் - புதிய ஏற்பாட்டை வசனத்திற்குப் பின் வசனமாகப் போதித்தனர். அவர்கள் வெளிப்படுத்தின விசேஷம் 3ம் அதிகாரம் வரையில் போராடின பின்பு, பெரும்பாலானவர்கள் அதை விட்டுவிட்டுத் திரும்பவும் மத்தேயு சுவிசேஷத்தின் முதல் அதிகாரத்திலிருந்து தொடங்கினர். ஃபிராங்க் பேக் அவர்கள், வேதாகமத்திலேயே "வாசிப்பதற்கும் படிப்பதற்கும் ஆசீர்வாதங்கள் அதற்குள்ளேயே கட்டியெழுப்பப் பட்டிருக்கும் ஒரே புத்தகமாக வெளிப்படுத்தின விசேஷம் இருக்கிறது என்ற உண்மையைக் கொண்டிருப்பினும், (1:3) இது ஒன்றுதான் அனேகமாகப் புதிய ஏற்பாட்டின் புத்தகங்களில், மிகவும் குறைவாகப் படிக்கப்பட்ட புத்தகமாய் இருக்கும்"[1] என்று நம்பினார்.*

## வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை மற்றவர்கள் ஏன் விரும்புவதில்லை - மற்றும் நான் ஏன் அதை விரும்புகின்றேன்

*கிறிஸ்தவர்கள் மத்தியில் வெளிப்படுத்தின விசேஷம் ஏன் ஒரு*

*பிரியமற்ற புத்தகமாக உள்ளது என்பதற்குப் பல காரணங்கள் தரப்படலாம்.*

*(1) மக்கள் இந்தப் புத்தகத்தினால் குழப்பப்படுகின்றனர். புதிய ஏற்பாட்டின் மற்ற புத்தகங்களைப்போல் இன்றி, இதன் பெரும்பாலான போதனையானது, வாசகர்கள் பொறுக்கியெடுத்துப் பயன்படுத்தும் வகையில் மேலோட்டமாக இருப்பதில்லை.*[2] *மற்றும், இது பழக்கமற்ற வார்த்தைகளாலும் வழக்கமற்ற உருவகங்களாலும் நிறைந்துள்ளது. நாம் அதை எதிர்கொள்வோம்: வெளிப்படுத்தின விசேஷம் ஒரு விசித்திரமான/ புதுமையான புத்தகமாக உள்ளது.*

*(2) சிலர் இந்தப் புத்தகத்தினால் எதிர்த்துத் தள்ளப்படுகின்றனர். இந்தப்புத்தகமானது, உணர்வுகளைத் தூண்டக்கூடியவர்களின் விளையாட்டுக் களமாகவும், மனநிறைவற்றவர்கள் மற்றும் அரைப் பைத் தியங்கள் ஆகியோரின் யுத்தத் திட்டமாகவும் ஆகியுள்ளது. இதன் தீர்க்கதரிசனங்கள் சமீபத்திய தலைப்புச் செய்திகளை எவ்வாறு முன்னு ரைக்கின்றன என்பது பற்றித்தொலைக்காட்சி சுவிசேஷ ஊழியர்கள் தயக்கமின்றி அறிவிக்கின்றனர். பைத்தியக்காரத்தனமான மார்க்கத் தலைவர்கள் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் இருந்து வசனங்களை உமிழ்ந்தனர், அதன் தீவிரத்தன்மை கொண்ட வசனங்கள் அவர்களின் யுத்த கோஷங்கள் ஆயின. மிகையான இந்த செயல்களினால் பலர் எதிர்த்துத் தள்ளப்படுகின்றனர்.*

*(3) பெரும்பான்மையானவர்கள் இந்தப் புத்தகத்தினால் பயமுறுத்தப் படுகின்றனர். சாலொமோன், "அநேகம் புஸ்தகங்களை உண்டுபண்ணு கிறதற்கு முடிவில்லை" (பிரசங்கி 12:12;* KJV*) என்று எழுதியபோது, அவர் வெளிப்படுத்தின விசேஷத்திற்கான விளக்கவுரைகளைத் தமது சிந்தையில் கொண்டிருந்தாரா? விளக்கங்களின் பரந்த அளவானது, வாசகர்களை "வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை, நீங்கள் விரும்புவதை எல்லாம் கூறும்படியாக்க உங்களால் முடியும்" என்று நம்பச் செய்துள்ளது மற்றும் அதுவே இந்தப் புத்தகத்தின் செய்தியைப் புரிந்துகொள்வதை அடிப்படை யில் இயலாததாக்குகிறது.*

*ஒவ்வொருவரும் இந்தப் புத்தகத்தை விரும்புவதில்லை - ஆனால் நான் இதை விரும்புகின்றேன். வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் வேதாக மத்தில் எனக்கு மிகவும் பிரியமான ஒன்றாக உள்ளது.*

*நான் ஒரு குழந்தையாக இருந்தபோது, இந்தப் புத்தகம் எனது கற்பனைத்திறனுடன் பேசிற்று. எனது பதிமூன்று அல்லது பதினான்கு வயதில் நான் ஒரு கோடைகால வேதாகம முகாமில் கலந்துகொண்டேன். முகாமில் பங்கேற்றவர்கள் ஒவ்வொருநாளும் தனிப்பட்ட தியானம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். ஒவ்வொருவரும், வேதாக மத்தை வாசித்து, ஜெபித்து அல்லது தேவனுடைய வசனத்தை மற்றும் உலகத்தைப் பற்றிச் சிந்திப்பதற்குத் தனிமையான ஒரு இடத்தைக் கண்டறிய வேண்டியிருந்தது. அந்த வேளைக்கு முன்பு நான் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை ஒருக்காலும் வாசித்திருக்கவில்லை, எனவே அதை வாசித்தல் என்பதே அந்த வாரத்திற்கான எனது செயல்திட்டமாக இருக்கும் என்று நான் முடிவு செய்தேன். அந்தப்*

புத்தகத்தை நான் நேசித்தேன் என்பதைக் கண்டறிந்தேன்! அது எதை அர்த்தப்படுத்திற்று என்பது பற்றிய கருத்து எதுவும் என்னிடம் இருந்ததில்லை, ஆனால் அதை நான் நேசித்தேன்! விரிவான கற்பனையுரு என்னைக் கலக்கிற்று. எனது சிந்தையில் நான் பல்வகையான வண்ணங்கள் கொண்ட, திகைப்பூட்டும் உருவங்கள் கொண்ட மற்றும் மிரளச் செய்யும் இயக்கம் கொண்ட ஆவிக்குரிய முப்பட்டைக் காட்சிக் கருவியில் என்னால் காணமுடிந்தது.

நான் ஒரு இளைஞனாக இருந்தபோது, இந்தப் புத்தகம் என் சிந்தையுடன் பேசிற்று. அபிலேன் கிறிஸ்தவப் பல்கலைக் கழகத்தில் (அப்போது அது கல்லூரியாக இருந்தது), ஃபிராங்க் பேக் அவர்களின் கீழ் நடைபெற்ற "வெளிப்படுத்தின விசேஷம்" பாடம் எனக்கு மிகவும் பிரிய மான பாடங்களில் ஒன்றாக இருந்தது. நான் வெளிப்படுத்தின விசேஷம் பாடப்போதனைகளை ஒலிநாடாவில் பதிவுசெய்து, அதைத் திரும்பத்திரும்ப கேட்பதின்மூலம் அதன் அதிகாரங்கள் அரிதாகப் பயணப்படும் பாதையாக இல்லாதொழியும் வரையிலும், அது பழக்கமான எல்லைப் பகுதியாகும் வரையிலும் அந்தப் புத்தகம் கூறுவதைக் கவனித்தேன். சகோதரர் பேக் அவர்களின் வழிநடத்துதலின்கீழ், அந்தப் புத்தகம் எனக்குத் திறந்திருக்கக் கண்டேன். சொற்றொடர்களின் சிக்கல்களை அறுத்தெறிவதில் நான் அகம்மகிழ்வைக் கண்டேன். (நான் எப்போதுமே வார்த்தைப் புதிர்களை நேசித்திருக்கின்றேன்.[3])

கடந்த நாற்பது ஆண்டுகளில், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் எனது இருதயத்துடனும் எனது ஆத்துமாவுடனும் பேசியிருக்கிறது. இந்தப் புத்தகத்தைப் பற்றிய எனது படிப்பை நான் தொடர்ந்து கொண்டே, நான் பிரசங்கித்துள்ள சபைக்குழுமங்கள் யாவற்றிலும் இதைப் போதித்துள்ளேன். இதை நான், ஆஸ்திரேலியாவில் உள்ள மெக்கியூரி பிரசங்கப் பள்ளியிலும் எட்டு ஆண்டுகளாகப் போதித்துள்ளேன். உலகத்திலும் எனது சொந்த ஆத்துமாவிலும் நன்மை மற்றும் தீமை ஆகியவற்றிற்கு இடையில் நடக்கும் போராட்டத்தைப் பற்றிய அறிவில் நான் அதிகமாக வளர்ந்திருக்கின்றேன். வெளிப்படுத்தின விசேஷத்தின் செய்தியான, *நாம் தேவனுடன் நிலைத்திருந்தால், வெற்றி உறுதியானது!* என்பதைக் காட்டிலும் அதிக உணர்வெழுச்சியூட்டக் கூடிய சிந்தனைகள் ஒருசிலவே உள்ளன. எனக்கு அந்தச் செய்தி தேவைப்படுகிறது! உங்களுக்கும்கூட அது தேவைப்படலாம்.

## நான் எவற்றைச் செய்துமுடிக்கக் கூடும் - மற்றும் நான் எவற்றைச் செய்ய இயலாது

சகோதரர் பேக் அவர்கள் எனக்கு என்ன செய்தாரோ, அதையே நான் உங்களுக்குச் செய்ய விரும்புகின்றேன்: வெளிப்படுத்தின விசேஷத்தில் ஒரு விறுவிறுப்பான பயணத்திற்கு உங்களை எடுத்துச் செல்லுதல். உங்களுக்கு, இந்தப் புத்தகத்தைப் படிப்பதற்குப் புரிந்துகொள்ளக்கூடியதும் மகிழ்வுடன் அனுபவிக்கக் கூடியதுமாக்குகிற தர்க்கரீதியான, கருத்துணர்வுள்ள அணுகுமுறையைக் காண்பிக்க நான் விரும்புவேன். அபிலேன் கிறிஸ்தவக்

கல்லூரியில் நான் பட்டம் பெற்ற சிறிது நாட்களிலேயே, கிரேட்டர் ஒக்லஹாமா நகர்ப்பகுதியில் இருந்த கிராம கிறிஸ்துவின் சபையில் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை நான் போதித்தேன். ஒருநாள் நான் அஞ்சல்மூலம் ஒரு கடிதத்தைப் பெற்றேன். அதன் ஒருபகுதியில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது:

> வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின்மீதான நமது ஞாயிறு காலை வேதாகமப் பள்ளிப்பாடங்களை நான் எவ்வளவு அதிகம் மகிழ்வுடன் அனுபவிக்கின்றேன் என்பதை உங்களுக்குக் கூறுவதே இந்தக் குறிப்பின் நோக்கமாக உள்ளது. நான் இந்தப் பாடத் தொடரைப்போல் இவ்வளவு மகிழ்வுடன் வேறு எந்தப் பாடத் தொடரையும் அனுபவித்ததாக எனக்கு நினைவில்லை ... வெளிப் படுத்தின விசேஷம் புத்தகத்தை நான் இதற்கு முன்பு இரண்டு அல்லது மூன்று முறை படித்திருக்கின்றேன், ஆனால் புரிந்து கொள்ளுதல் மற்றும் புரிந்து உணர்தல் ஆகியவற்றின் சிறப்பான ஒளிர்வை முதன் முறையாக இப்போதுதான் பெறத் தொடங்கியிருக்கின்றேன் என்பதை நான் உண்மை நிறைவுடன் கூறமுடியும். இப்போதுதான் நான் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை விரும்புவது போன்ற ஒன்றைச் செய்கின்றேன் என்ற உயர்வான வழக்கத்திற்கு மாறான கூற்றைக் கூறுமளவுக்கு, நீங்கள் இந்தப் புத்தகத்திற்கு, அப்படிப்பட்ட ஒரு நடைமுறைக்கு உகந்த மற்றும் (மிக முக்கியமாக) நம்பக்கூடிய அணுகுமுறையைக் கொண்டிருக்கின்றீர்கள்.[4]

இப்பொழுது தொடங்கியிருக்கின்ற இந்தப் படிப்பை நாம் முடிக்கும்போது, நீங்கள் ‘‘இப்போதுதான் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை விரும்புவது போன்ற’’ ஒன்றைச் செய்வதாக உங்களால் நேர்மையுடன் கூற முடியும் என்றால், நான் சந்தோஷம் அடைவேன். இந்தப் புத்தகத்தில் உள்ள நம்பிக்கையின் செய்தியை உங்களால் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளப் போதுமான அளவுக்கு ஆறுதலை நீங்கள் உணர்ந்தால், என் பாத்திரம் நிரம்பி வழியும்.

இந்தப் புத்தகத்தின் ஒவ்வொரு விபரத்தைப் பற்றியும் அறிய விரும்பும் உங்கள் ஆர்வத்தூண்டுதலை நான் திருப்திபடுத்த மாட்டேன் என்று உங்களுக்கு நான் எச்சரிக்கை விடுத்தாக வேண்டும். பரிசுத்த ஆவியானவர் தாம் செய்த கற்பனை உருவைப் பயன்படுத்தியது ஏன் என்று அளவிட முயற்சி செய்தல் என்பது, வெளிப்படுத்தின விசேஷத்தைப் படிப்பதில் உள்ள “கேளிக்கையின்” ஒரு பகுதியாகும் என்று நான் தனிப்பட்ட வகையில் நினைக்கின்றேன், எனவே நான், அடையாளங்களின் குறிப்பர்த்தம் பற்றி நான் நினைப்பதைக் கூறுவேன். விபரங்கள் பற்றிய எனது முடிவுகளை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா அல்லது கருத்து வேறுபடுகின்றீர்களா என்பது சார்புநிலையில் முக்கியமற்றதாக உள்ளது. புத்தகத்தின் செய்தியானது ஒவ்வொரு “நுணுக்கமான விஷயங்களின்” குறிப்பர்த்தத்தின்மீது அமைவதில்லை, ஆனால், பதிவு செய்யப்பட்ட தரிசனங்களின் முற்றான செயல்விளைவின்மீதே அமைந்துள்ளது. சகோதரர் பேக் அவர்கள் கூறிய

படி, "... எல்லா விபரங்களும் உங்களுக்குத் தெளிவாக இல்லையென்றாலும், மாபெரும் பிரதான பாடங்கள் பற்றிக்கொள்ளப்பட முடியும்."[5]

வெளிப்படுத்தின விசேஷத்தின் வசனப்பகுதியைப் பொறுத்தமட்டில், நாம் இருபகுதிகளில் மட்டுமே போதனையியல் ரீதியாய் இருக்க இயலும்: (1) வசனப்பகுதியே ஒரு அடையாளத்தைப் பற்றியதான, எளிய மற்றும் தெளிவான விளக்கத்தைக் கொடுக்கிறது என்றால், அந்த விளக்கத்தைப் பற்றி நாம் போதனையியல் ரீதியாய் இருக்க இயலும். உதாரணமாக, "[1:12ன்] ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்" (1:20) என்று இயேசு கூறியிருப்பதால், 1:12ல் உள்ள ஏழு குத்துவிளக்குகள் வேறு எதையாவது அர்த்தப் படுத்துகின்றன என்று கூறுவதற்கு எவரொருவரும் உரிமைபெற்றிருப்பதில்லை. (2) யாராவது, வேதாகமத்தின் பிற இடங்களில் உள்ள தெளிவான போதனைக்கு நேர்மாறாகும் வகையில் வெளிப்படுத்தின விசேஷத்தின் வசனப்பகுதி ஒன்றை விளக்கியுரைத்தால், நாம் போதனையியல் ரீதியாகவும் மற்றும் வலிவார்ந்த வகையிலும் "அந்த விளக்கம் தவறானது!" என்று கூறமுடியும் (மற்றும் கூறுவோம்). அதைத் தவிர, நாம் கிறிஸ்தவ தர்மத்தைச் செயல்படுத்தியாக வேண்டும். "தனக்குப் பிரியமான யூகத்தைக் கொண்டிராதவர் முதல் கல்லை எறியட்டும்!"[6]

## முடிவுரை

நான் உங்கள் ஆர்வத்தைத் தூண்டியுள்ளேன் என்று நம்புகின்றேன். நீங்கள் பரலோகத்திற்குச் செல்வதற்கு வெளிப்படுத்தின விசேஷத்தை அறிந்து புரிந்து கொண்டிருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லாதிருக்கலாம், ஆனால் நீங்கள் இந்தப் புத்தகத்தைப் புறக்கணித்தால், பின்வருபவை உங்களுக்கு நேரிடும் என்று நான் உறுதியாய்க் கூற முடியும்:

... இயேசுவினால் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களை (1:3) நீங்கள் தவறவிடுவீர்கள்.

... இயேசுவைப் பற்றி அதிகம் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஒன்றை நீங்கள் தவறவிடுவீர்கள். (ஒவ்வொரு புத்தகத்திற்கும் அவரே மையமாக இருக்கின்றார்.)

... வேதாகமத்தின் உச்சகாட்சியை நீங்கள் தவறவிடுவீர்கள். (மற்ற அறுபத்து ஐந்து புத்தகங்களும் இந்தப் புத்தகத்தை நோக்கியே நம்மை வழிநடத்துகின்றன.)

... நீங்கள் வாழ்வின் கருத்தை ஏற்படுத்த உதவக்கூடிய அறிவுறுத்தலை நீங்கள் தவறவிடுவீர்கள்.(அணுகுமுறைகள் மாறுபட்டிருக்கலாம், ஆனாலும் தேவனே இன்னமும் கட்டுப்பாடு செலுத்துகின்றார்.)

... கடினமான வேளைகளில் நீங்கள் உயிர்பிழைத்திருக்க உங்களுக்கு உதவக்கூடிய உற்சாகமூட்டுதல்களை நீங்கள் தவறவிடுவீர்கள். (தேவன் எல்லாவற்றையும் சரியாக்குவார்.)

... வெளிப்படுத்தின விசேஷம் பற்றி இன்றைய நாட்களில் பெருகியுள்ள பண்படாத யூகம் என்ற புகைமூட்டத்தில் சிக்கியுள்ளவர்களுக்கு உதவ இயலாத நிலையில் நீங்கள் நிலைத்திருப்பீர்கள்.

... நீங்கள் உங்களையே அந்த யூகத்திற்கு - சபையைச் சீர்குலைக்கும் யூகத்திற்கு, கிறிஸ்தவர்கள் விழுந்துபோகக் காரணமான யூகத்திற்கு - செயலற்ற வகையில் ஒப்புக்கொடுத்துவிடுவீர்கள்.

புதன்கிழமை இரவு வகுப்புகளில் நான் போதிக்கையில், "அதைப் பற்றி எனக்கு அக்கறையில்லை" என்று கூறிய தோழியின் இருதயத்தில் வெளிப் படுத்தின விசேஷம் புத்தகம் பற்றிய ஒரு அக்கறையை உருவாக்குதல் என்பது எனது அறைகூவல்களில் ஒன்றாக இருந்தது. பின்பு, எழுதப்பட்ட இந்தப் பாடங்களை நான் தயாரிக்கையில், அந்தப் புத்தகத்தின் மீதான உங்கள் மதிப்பை உயர்த்துவது என்பது எனது அறைகூவல்களில் ஒன்றாக இருந்தது. ஏர்ல் பால்மர் அவர்கள், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம், "புரிந்துகொள்ளக் கடினமான புத்தகம் என்பது மட்டுமல்ல; இது கீழே வைப் பதற்கும் கடினமான ஒரு புத்தகமாக உள்ளது" என்று கூறினார்.[7] நமது படிப்பு முடிவதற்குள் இதை நீங்கள் ஒப்புக்கொள்ளும்படிக்கு நான் ஜெபிக்கின்றேன்.

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

இந்தப் பாடத்தொடரின் பெரும்பான்மையான பாடங்களின் முடிவில், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் பற்றிய உங்கள் போதித்தல் மற்றும் பிரசங்கித்தலில் உங்களுக்கு உதவுவதற்கென்று சில குறிப்புகளை நான் உள்ளடக்குவேன்.

''ஆண்டவரே எது வரைக்கும்'' என்ற (இந்த புத்தகத்திலுள்ள) பாடத்தில் தொடங்கி, நான் மிக அரிதாகச் செய்யப்பட்டுள்ள பின்வரும் செயலைச் செய்ய முயற்சித்துள்ளேன்: இந்தப் புத்தகத்தின் வசனப்பகுதி முழுவதையும் எடுத்துரைத்து முடிக்கிற விரித்துரைப்புப் பிரசங்கத்தின் வரிசைத் தொடர் ஒன்றை முன்வைத்தல். பாடங்கள், அடிக்குறிப்புகள் அல்லது துணைப் பாடங்களில் நான் வேதாகம வசனப்பகுதியில் இருந்து போதுமானவற்றை எடுத்துக் கையாளுவேன் - ஆனால், வெளிப்படுத்தின விசேஷம் பற்றிய ஆயிரக்கணக்கான விளக்கவுரைகளுடன் ஒன்றைக் கூட்டுதல் என்பது எனது நோக்கமல்ல. மாறாக, இந்தப் புத்தகத்தில் உள்ள பிரசங்கச் சாத்தியக்கூறுகளைக் காண்பித்தல் என்பதே எனது நோக்கமாக உள்ளது.

இவ்வசனப்பகுதிகள் இன்றைய நாட்களில் எவ்வாறு நடைமுறைப் படுத்தப்பட முடியும் என்பதற்கு விசேஷித்த கவனம்தர நான் திட்டமிட்டுள்ளேன். வெளிப்படுத்தின விசேஷத்தில் இருந்து விரித்துரைப்புப் பிரசங்கம் ஒன்றை விளக்கப்படுத்திய ஜேம்ஸ் ஸ்ட்ராவ்ஸ் அவர்கள், "நடைமுறைப் பயன்பாடு ஒன்றைப் பற்றிப் பிடித்துக்கொள்ள வேண்டும் என்ற அவசியம் இருந்ததில்லை. பொருத்தம் என்பது இந்தப் புத்தகம் முழுவதிலும் இருந்துள்ளது. அது இந்தப் புத்தகத்தின் கட்டமைப்பில் பிண்ணப்பட்டுள்ளது'' என்று எழுதினார்.[8] இன்றைய

நாட்களின் அறைகூவல்களுக்கான பொருத்தத்தை, (திரு. ஸ்ட்ராவ்ஸ் அவர்களின் வார்த்தைகளைப் பயன்படுத்துவதென்றால்) வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் வசனப்பகுதியின் "கட்டமைப்பில் பிண்ணப் பட்டுள்ள" பொருத்தத்தை நீங்கள் காணும்படி செய்ய உதவுதல் என்பதே எனது அறைகூவலாக இருக்கும்.

இந்தப் பாடங்களை ஒரு வகுப்பு அமைவில் பயன்படுத்த முடியும்; பிரசங்க அணுகுமுறை என்பது உங்கள் மாணவர்களுக்கு வசனப்பகுதியை நடைமுறைப் படுத்துவதில் உதவ வேண்டும். இந்தப் பாடங்களைப் பிரசங்கங்களாக முன்வைப்பதற்குப் பலர் தூண்டப்படுவார்கள் என்று நான் நம்பிக்கையாய் இருக்கின்றேன். சிலர் இந்தப் பிரசங்கங்கள் யாவற்றையும் பயன்படுத்த விரும்பலாம்; மற்றவர்கள் தேர்ந்துகொள்ளப்பட்ட சில பிரசங்கங்களை மாத்திரம் பயன்படுத்த விரும்பலாம்; ஆனால் தயவு செய்து இவற்றைப் பயன்படுத்துங்கள்.

இவற்றைப் பயன்படுத்துங்கள்.

வசனப்பகுதிக்கான விசேஷ சித்திரங்கள், பிரையன் வாட்ஸ் என்ற நேர்த்தியான ஓவியக்கலைஞரால் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது இந்தப் பாடத்தொடரின் தனிச்சிறந்த ஒரு அம்சமாக உள்ளது. இந்தச் சித்திரங்களுக் காக நான் பிரையன் அவர்களுடன் பலவாரங்கள் இணைந்து உழைத்தேன். உங்கள் பாடங்களை அல்லது பிரசங்கங்களை மேம்படுத்துவதற்கு நீங்கள் இவற்றைப் பெரிதாக்க மற்றும்/அல்லது மறுபதிப்புச் செய்ய விரும்பலாம். (உங்களிடத்தில் ஒரு ஓவர்ஹெட் புரொஜக்டர் இருந்தால், இவற்றை பிலிம்களில் பதிவுசெய்து இவற்றில் வண்ணமும் தீட்டலாம்.) இடம் இருக்கும் அளவுக்கு இந்த இதழில் நாங்கள் பல சித்திரங்களை உள்ளாக்கி னோம். உண்மையில், நாங்கள் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் வசனங்கள் மற்றும் பிரையன் அவர்களின் சித்திரங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஒரு தொகுப்பை அச்சிடலாம்.

இருப்பினும் நாம், முதலாவதான விஷயங்களை முதலில் வைப்போம்: முதலில் நீங்கள் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை முழுமையான அளவில் புரிந்துகொள்ளவும் அந்த பொருளடக்கத்தில் நன்கு பழக்கப்பட வும் வேண்டும். நமது படிப்பை நாம் அணுகுகையில், இந்தப் பாடக்கருத்துக் களைப் பற்றிய உங்கள் தனிப்பட்ட படிப்பில் உதவுவதற்கு நான் சில விளக் கங்களைத் தருவதற்கு என்னை அனுமதியுங்கள்.

வெளிப்படுத்தின விசேஷத்தின் - "(1:2)" போன்ற - பெரும்பான்மை யான குறிப்புகள் "வெளிப்படுத்தின விசேஷம்" என்ற வார்த்தையை உள்ள டக்கியிராது. ஆகவே, வேதாகமத்தின் புத்தகப்பெயர் எதுவுமின்றி ஒரு குறிப்பை நீங்கள் கண்டால், சந்தர்ப்பப் பொருளில் அது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் ஒரு குறிப்பாக இருக்க வேண்டும்.

எனது வேதவசனப் பகுதிக்கு நான் New American Standard Bible (NASB) என்ற வேதாகமத்தைப் பயன்படுத்துவேன், ஆனால் King James Version (KJV) என்ற வேதாகம வசனம் குறிப்பிடத்தக்க வகையில் வேறு பட்டிருக்கும் போது சிலவேளைகளில் நான் அதைச் சுட்டிக் காண்பிப்பேன். அவ்வப்போது நான், Amplified Bible (AB), American Standard Version (ASV),

Contemporary English Version (CEV), New Century Version (NCV), New English Bible (NEB), New International Version (NIV), New King James Version (NKJV), New Revised Standard Version (NRSV), Revised English Bible (REB), Revised Standard Version (RSV), மற்றும் Simple English Bible (SEB). போன்ற வேதாகமத்தின் மற்ற மொழிபெயர்ப்புகளையும் குறிப்பிடுவேன். எப்போதாவது நான் Living Bible (LB) அல்லது New Living Translation (NLT) போன்ற பொழிப்புரைக் குறிப்புகளையும் குறிப்பிடுவேன், ஆனால் இவைகள் மொழிபெயர்ப்புகள் அல்ல, பொழிப்புரைகளாக மாத்திரமே உள்ளன என்பதை சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள்.

சிலவேளைகளில் நான், அடிக்குறிப்புகளிலும், போதகர்கள் மற்றும் பிரசங்கியார்களுக்குக் குறிப்புகளிலும் கூடுதல் ஆதாரமூலங்களைக் குறிப்பிடுவேன். இந்தப் பாடக்கருத்துக்கள் உங்களில் சிலருக்குக் கிடைக்க வகையற்று இருந்தாலும், இவற்றைக் கண்டறியக் கூடியவர்களின் பயன்பாட்டிற்கென்றே நான் இவற்றைக் குறிப்பிடுகின்றேன். இந்தக் கூடுதல் இணைப்புகள், பாடங்களை நீங்கள் புரிந்து கொள்வதற்கு அவசியமானவைகளாய் இருப்பதில்லை; எனவே நீங்கள் இவற்றில் குறிப்பிட்டுள்ள ஆதாரமூலங்களைப் பெற இயலாவிட்டால் கவலைப்பட வேண்டாம். (நானோ அல்லது இன்றைக்கான சத்தியம் வெளியீட்டின் அலுவலகமோ உங்களுக்கு இந்த ஆதாரமூலங்கள் யாவற்றையும் அனுப் பித்தர இயலாது என்பதை நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள் என்பதில் நான் உறுதியாய் இருக்கின்றேன்.)

பயன்மிகுந்த ஆதார மூலங்களை எனக்குக் கொடுத்து உதவிய யாவருக்கும் என் நன்றிகலந்த பாராட்டைத் தெரிவிக்க விரும்புகின்றேன். பல தனிநபர்கள், வெளிப்படுத்தின விசேஷம் பற்றிய தங்கள் மதிப்புமிக்க விளக்கவுரைகளை என்னிடத்தில் ஒப்புவித்துள்ளனர்; ஹார்டிங் பல்கலைக் கழகத்தினர், இப்போது அச்சில் இராத, தரம் வாய்ந்த புத்தகங்களை நான் நீண்டநாட்கள் பயன்படுத்த தயவுடன் அனுமதித்தனர்; ஹார்டிங் பல்கலைக்கழகப் புத்தக நிலையத்தினரும் மற்றும் பிற புத்தக விற்பனையா ளர்களும் எனக்கு, கண்டறியக் கடினமான தொகுப்புக்களை தேடிக் கண்டு பிடிக்க உதவினர். இன்றைக்கான சத்தியம் உலக ஊழியப் பள்ளிக்கு, ஜேக் W. ஹால் அவர்கள், வெளிப்படுத்தின விசேஷம் பற்றிய நூற்றுக்கும் மேற்பட்ட தொகுப்புக்கள் மற்றும் இந்தப் புத்தகத்தின் மீதான தமது விரிவான குறிப்புகள் உட்பட. தமது நூலகம் முழுமையையும் உவந்து அளித்தபோது பெரும்பான்மையான அருளிரக்கமுள்ள பங்களிப்பு வந்து சேர்ந்தது. சகோதரர் ஹால் அவர்கள், வெளிப்படுத்தின விசேஷம் பற்றி ஒரு புத்தகம் எழுதுதல் என்ற தமது வாழ்நாள்காலம் முழுவதிலுமான கனவை நிறைவேற்றக் கூடாமற் போயிற்று, ஆனால் அவரது கல்விப்புலமையானது இந்தப் பாடத்தொடருக்கு ஆசீர்வாதமாக அமைந்துள்ளது, மற்றும் அது, இன்றைக்கான சத்தியம் நூலகத்தைப் பயன்படுத்த வாய்ப்புக்கிடைக்கும் யாவரும் வருகிற காலங்களில் எழுதவிருக்கும் எழுத்துக்கள் யாவற்றிலும் தொடர்ந்து பிரதிபலிக்கும்.

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் பற்றிய உங்கள் படிப்பில், தேவன்

உங்களை ஆசீர்வதிப்பாராக - மற்றும் உங்கள் படிப்பின் விளைவுகளை நீங்கள் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுகையிலும் அவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

டேவிட் ரோப்பர்

---

குறிப்புகள்

[1]Frank Pack, *Revelation*, Part 1, The Living Word Series (Austin, Tex.: R. B. Sweet Co., 1965), 5. [2]புதிய ஏற்பாட்டின் மற்ற புத்தகங்களில் உள்ள எல்லாப் போதனைகளும் சுலபமாகப் புரிந்துகொள்ளப்படுகின்றன என்று நான் கருத்துத் தெரிவிப்பதில்லை; ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் தவிர, பெரும்பாலான புத்தகங்களில் செய்திகள் தெளிவான, எளிய மொழிநடையில் தரப்பட்டுள்ளன. [3]"குறிப்புச் சொல்லைக் கண்டறிதல்" என்பதே வெளிப்படுத்தின விசேஷத்தைப் படிப்பதற்கான மிகச்சிறந்த நோக்கம் என்று நான் கருத்துத் தெரிவிக்கவில்லை. நான் எனது தற்போதய புரிந்துகொள்ளுதலுக்கு என்னை அழைத்துச்செல்ல நான் பயணப்பட்ட சாலையைப் பற்றி மாத்திரம் கூறுகின்றேன். [4]Jane Hart, Oklahoma City, to David Roper, Oklahoma City, 28 July 1960. [5]Pack, 4. [6]C. F. Wishart, *The Book of Day* (New York: Oxford Press, 1935), vii. [7]Earl F. Palmer, *1, 2, 3 John & Revelation*, The Communicator's Commentary Series, vol. 12 (Dallas: Word Publishing, 1982), 93. [8]James Strauss, *The Seer, the Saviour, and the Saved*, rev. ed., Bible Study Textbook Series (Joplin, Mo.: College Press, 1979), 379.

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தைப் படிப்பதற்குச் சிலர் தயங்குவது ஏன்? நீங்கள் தயங்குகின்றீர்களா? ஆம் என்றால் ஏன்?
2. வெளிப்படுத்தினவிசேஷத்தில் கண்டறிந்துள்ளதாக மக்கள் உரிமை கோரும் பண்பற்ற மற்றும் தகுதியற்ற உபதேசங்களாக நீங்கள் கேள்விப் பட்டுள்ளவை யாவை?
3. இந்தப் பாடத்தின் எழுத்தாளர், வெளிப்படுத்தின விசேஷமானது தம்முடன் எந்த மூன்று வழிகளில் பேசுகிறதாகக் கூறுகின்றார்?
4. இந்தப் புத்தகத்தினால் ஆசீர்வதிக்கப்படுவதற்கு இதைப் பற்றிய ஒவ்வொன்றையும் புரிந்துகொள்ளுதல் அவசியமானதாக உள்ளதா? அல்லது, இந்தப் புத்தகத்தினால் ஆசீர்வதிக்கப்படுவதற்கு இதைப் பற்றிய சில விஷயங்களைப் புரிந்து கொள்ளுதல் அவசியமானதாக உள்ளதா?
5. நாம் ஒருவர் மற்றொருவருடன் ஐக்கியத்தில் இருப்பதற்கு வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு விஷயத்தையும் ஒரேவிதமாகப் புரிந்துகொள்ள வேண்டுமா?
6. இந்தப் புத்தகத்தைப் பற்றிய எந்த இரண்டு பகுதிகளில் நாம்

*போதனையியல் ரீதியாக இருக்க முடியும்?*

7. *இந்தப் புத்தகத்தைப் படிக்க வேண்டியதற்கான காரணங்கள் சிலவற்றைப் பட்டியலிடவும். இந்தப் பாடத்தின் மூலமாக நீங்கள் எதைப் பெறலாம் என்று நம்பிக்கையாய் இருக்கின்றீர்கள்?*